## பாறையிலும் பயிர் வளரும்.. நிரூபித்துக் காட்டிய விவசாயி ….

## 10.02.2014

மனசு வைத்தால்.. பாறையிலும் பயிர் பண்ணலாம் என்பார்கள். இதையே மந்திரமாக எடுத்துக் கொண்டு, புதுக்கோட்டை மாவட்டம், அரண்மனைப்பட்டியில், கருங்கல் பாறையாக இருந்த நிலத்தை, கடின முயற்சியால், விளைநிலமாக மாற்றியிருக்கிறார், கணபதி.

இந்த நிலத்தை விவசாய நிலமாக மாற்ற முயற்சி எடுத்துக் கொண்டிருந்த போது, பார்த்தவங்க எல்லாம், கட்டாந்தரையில் ஏம்ப்பா விவசாயம் பண்றே என்று கிண்டல் செய்தார்கள். அவங்க சொன்னதிலும் ஒரு நியாயம் இருந்தது. ஏன்னா, இது கருங்கல் பாறைதான். ஆனால், பத்து வருட போராட்டத்திற்குப் பிறகு, இப்ப பயிர் விளைந்து நிற்பதை பார்க்கும் போது ரொம்ப சந்தோஷமாக இருக்கு என்று ஊரே மலைத்து நிற்கிறது என்றார் கணபதி.

பி.ஏ, பி.எல் படித்து முடித்த நான், சென்னை தலைமைச் செயலகத்தில் மொழி பெயர்ப்பாளர் வேலையில் சேர்ந்தேன். எங்க குடும்பத்திற்கு விவசாயம்தான் தொழில். அதனால், எனக்கும் விவசாயத்தின் மேல் ஆர்வம். 84-ம் வருடம் வேலையை ராஜினாமா செய்துவிட்டு, கையிலிருந்த காசை வைத்து…. கொஞ்சம் தரிசு நிலங்களை விலைக்கு வாங்கியும், கொஞ்ச நிலங்களை குத்தகைக்கு எடுத்தும் விவசாயத்தை ஆரம்பித்தேன். அப்படித்தான் இந்த நிலமும் கைக்கு வந்தது. இரண்டு ஏக்கர் முழுவதும் புதர்காடு மாதிரி இருந்தது. இந்த நிலத்தில் ஒன்றும் செய்ய முடியாது என்று ஊரே சொன்னாலும், விவசாய நிலமாக மாற்ற முடியும் என்ற நம்பிக்கை இருந்தது என்று சொல்லும் கணபதி, அதை கொஞ்சம் கொஞ்சமாக சாதித்தும் இருக்கிறார்.

2004-ம் வருடம், கொஞ்ச பேரை சேர்த்து கொண்டு பாறையை உடைக்க ஆரம்பித்தேன். கொஞ்சம் கொஞ்சமாக பாறைகளை உடைத்து, ஆறு அடி வரைக்கும் எடுத்தோம். அதன்பிறகு, கண்மாய் மண், என்னோட வயலில் இருந்த மேல் மண் எல்லாவற்றையும் கொண்டு வந்து.. மூன்றரை அடி உயரத்திற்கு கொட்டி நிலத்தை சமப்படுத்தினோம். டிராக்டர் வைத்து உழுது சின்னச் சின்ன கற்களையெல்லாம் எடுத்தோம். பாறை என்பதால் போர் போட முடியவில்லை. அதனால், 14 கிணறுகளை வெட்டியிருக்கிறேன். ஒவ்வொன்றும் 70 அடி ஆழம். சில கிணறுகளுக்கு கரன்ட் கனெக்ஷன் ஜெனரேட்டர் வைத்து தண்ணீர் இறைத்துதான் விவசாயம் பண்றேன்.

எனக்கு சொந்தமாக 150 மாடுகளும், 400 ஆடுகளும் இருக்கு. ஒவ்வொரு ஏக்கரிலும் நான்கு நாளைக்கு மாட்டையும் ஆட்டையும் கட்டி வைத்துவிடுவேன். வடக்கயிறால் மூன்று வரிசையாக பிரித்து ஒவ்வொரு வரிசையிலும் 15 மாடுகளை எதிர் எதிராக கட்டிடுவேன். ஆடுகளை மொத்தமாகக் கட்டிடுவேன். இதனால், அதுகளுடைய சாணம், மூத்திரம் இரண்டும் நிலத்திலேயே விழுந்துவிடும். ஐந்து நாள் கழித்து சாணம் காய்வதற்குள் உழுது விடுவதால் அவ்வளவு சத்தும் மண்ணில் சேர்ந்து நிலம் வளமாகிவிட்டது. 15 ஏக்கரில்

மக்காச்சோளம், 5 ஏக்கரில் சின்ன வெங்காயம் போட்டிருந்தேன். மக்காச்சோளத்தில் 30 டன், சின்ன வெங்காயத்தில் 7 டன் மகசூல் கிடைத்தது.

மாதத்திற்கு ஒரு முறை வேப்பம் பிண்ணாக்கு கரைசலை அடிப்பதை தவிர, உரம் என்று எதையுமே தனியாக வாங்கி போடலை. மாட்டுச்சாணத்தையும், மூத்திரத்தையும் மட்டும்தான் அடியுரமாக போட்டேன் என்று சொன்னால் யாரும் நம்ப மாட்டேன் என்கிறார்கள். அந்தளவிற்கு விளைந்து நின்றதுதான் காரணம். இயற்கை உரத்துடன் அருமை இப்பபோதுதான் இந்தப்பக்கம் இருப்பவர்களுக்கு புரியுது என்று சொன்னார் கணபதி.

மக்காச்சோளம் ஒரு டன் சராசரியாக 15,000 ரூபாய் விலை போனதில்.. 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் கிடைத்தது. சின்ன வெங்காயத்திற்கும் நல்ல விலை கிடைத்தது. சராசரியாக கிலோ 40 ரூபாய் என்று விற்பனை செய்ததில் 2 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் லாபம். மக்காச்சோளத் தட்டையை அப்படியே மடக்கி உழுது, கேழ்வரகு நடலாம் என்று இருக்கிறேன் என்றார் கணபதி.

மொத்தமாக கணக்குப் பார்த்தால்.. கொஞ்சம் கூடுதலாகததான் செலவழித்திருக்கிறேன். ஆனால், ஒவ்வொன்றுக்கும் உதவாத பாறை நிலம் விளைந்து நிற்பதைப் பார்க்கும் போது மனதுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. அந்த சந்தோஷத்திற்கு ஈடு, இணை கிடையாது. அதனால் தான், என்னை அட்வகேட் என்று சொல்லிக்கொள்வதைவிட விவசாயி என்றுதான் சொல்லிக் கொள்கிறேன் என்றார்.

**தொடர்புக்கு**

கணபதி, செல்போன் : 98400 98480

**ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 10.02.2014 www.vikatan.com**